(இ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலும் ஓர் அறிவிப்பு. எதிர்பாராத விதமாக பேரவை நேற்று ஒத்திவைக்கப்பட வேண்டி ஏற்பட்டது. அதனால் 1982-83 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதமும், அதற்கான மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றலும் நேற்று எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. எனவே, இன்று காலை துணை நிதி நிலை அறிக்கைமீது விவாதத்தை பகல் 12 மணிவரை வைத்துக் கொண்டு. 12 மணிக்கு மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

பேரவையின் 203—வது விதியின் கீழ் எனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை, இன்றே எடுத்துக் கொள்வதற்கு, அதற்கான விதிகளைத் தளர்த்துவதற்கான தீர்மானத் தப் பேரவை ஏற்ற பின், அனுமதி அளிக்கப்படுகிறது.

எனவே, பகல் 12 மணி வரை பொது விவாதமும். 12 மணிக்கு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும், அத யடுத்து நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து உடனே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றலும் நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை அடுத்து, இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனையை ரத்து செய்யக் கோருவது குறித்த தீர்மானம் ஒரு மணி நேர விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

(முற்பகல் 10·20)

(ஈ) கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1982 83 ஆம் ஆண்டுகளில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவைக்கு முன் மொழிதல் குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது.

"In pursuance of Article 203 Clause 3 of the Constitution of India; I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the year 1982-83 as detailed in the annexure enclosed".